# இலங்கை வங்கி

நாடு பூராக காணப்படும் 600 மேற்பட்ட கிளைகளின் வலையமைப்பு ஊடாக 12 மில்லியனுக்கு மேல் வாடிக்கையாளர்களுக்கு சேவையாற்றுகின்ற இலங்கைவங்கி அதன் தகவல் தொழில்நுட்பப் பிரிவிற்கு இளம், சுறுசுறுப்பான, ஆற்றல்மிக்க, பெறுபேறுகளை அடையக்கூடிய தகைமையுடைய தனிநபர்களை சேர்த்துக் கொள்வதற்கு விரும்புகின்றது.

## கணனி அமைப்பு பகுப்பாய்வாளர்/செய் நிரலர் - I
## (SYSTEM ANALYST/PROGRAMMER- I)

### ➢ தகுதிப் பிரமாணங்கள்

இலங்கைப் பிரஜையாக இருக்கவேண்டும்.

**கல்வித் தகைமைகள்**

- அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் கணனி விஞ்ஞானம் அல்லது தகவல் தொழில்நுட்பத் துறையில் 1ஆம் வகுப்பு அல்லது 2ஆம் வகுப்புடன் (உயர் பிரிவு) கூடிய இளமானிப்பட்டம்.

**அல்லது**

- அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் கணனி விஞ்ஞானம் அல்லது தகவல் தொழில்நுட்ப துறையில் ஒரு வகுப்புடன் கூடிய இளமானிப்பட்டம் மற்றும் மென்பொருள் அபிவிருத்தி / தரம் உறுதிப்படுத்தல்/ தரவுத்தளம் நிர்வாகம் / தகவல் பாதுகாப்பு ஆகியவற்றில் குறைந்தது 02 வருட அனுபவம்.

**வயது**

- விண்ணப்பமுடிவுத் திகதியில் 30 வயதுக்குட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

**(மேற்குறிப்பிட்ட தகைமைகள் இல்லாதவர்கள் விண்ணப்பிக்க வேண்டாமென அறிவுறுத்தப்படுகின்றீர்கள்)**

### ➢ ஏனைய சிறப்பம்சங்கள்

- தகவல் முறை பாதுகாப்பு / தரவுத்தளம் நிர்வாகம் மற்றும் தரம் உறுதிப்படுத்தல் ஆகியவை தொடர்பான தொழில்வாண்மை அத்தாட்சி மேலதிகத் தகைமைகளாகும்.
- தரம் உறுதிப்படுத்தல் / தரவுத்தளம் நிர்வாகம் / தகவல் பாதுகாப்பு ஆகியவற்றில் அனுபவம் அல்லது enterprise/advance JAVA, J2EE, XML, RPG, ILE, CLLE, Dojo Spring MVC, WEB Sphere, C#, net, html ஆகியவற்றைப் பிரயோகித்து மென்பொருள் அபிவிருத்தி அனுபவம் மேலதிக தகைமை ஆகும்.
- சுய ஊக்கம் மற்றும் பெறுபேறுகளை அடையக்கூடிய ஆற்றல் காணப்படல் வேண்டும்.
- பிரச்சினை தீர்க்கும் சிறந்த ஆற்றல்களுடன் கூடிய உயர் புத்தாக்க ஆற்றல்.

### ➢ விதிகள் மற்றும் நிபந்தனைகள்

- இப்பதவி சாதாரண வங்கியியல் துறைக்குப் புறம்பானதெனினும் (மூடிய சேவை) வங்கிச் சேவையின் பொதுவான விதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் உட்பட்டதாகும்.
- விண்ணப்பதாரர் தகுந்தவரெனத் தெரிவு செய்யப்பட்டால் அவர் ஒரு வருட தகைமைகாண் காலத்தின் பின்பு வங்கியின் நிரந்தர சேவைக்கு உள்ளீர்க்கப்படுவர்.
- இப்பதவிக்கான அடிப்படை சம்பள அளவுத்திட்டம் : ரூபா. 34,250/= - ரூபா. 47,650/=
  ரூபா. 670/= x 20

  (சகலதும் உட்பட மாறும் வாழ்க்கைச் செலவுப்படியுடன் (CLA) மாதாந்த மொத்தச் சம்பளம் சுமார் ரூபா. 76,014/11 ஆகும்).
- தேவைப்படும் போது நாடு பூராக அமைந்துள்ள அனைத்துக் கிளைகளிலும் மேலதிக நேரம் மற்றும் வார இறுதி / விடுமுறை நாட்களிலும் வேலை செய்யக்கூடியவராக இருத்தல் வேண்டும்.

### ➢ தெரிவு செய்யும் முறை

- போட்டிப் பரீட்சையின் பின்பு தெரிவு செய்யப்பட்ட பரீட்சார்த்திகளுக்கு நேர்முகப்பரீட்சை நடாத்தப்படும்.
- பரீட்சை பின்வரும் இரண்டு வினாப்பத்திரங்களைக் கொண்டதாகும்.

  பத்திரம் 1 - IQ பரீட்சை
  பத்திரம் 2 - விடயப் பரீட்சை

### ➢ விண்ணப்பிக்கும் முறை

**www.boc.lk** இலிருந்து ("careers" எனும் tab ஊடாக) மாதிரி விண்ணப்பத்தை தரவிறக்கம் செய்து சுயவிபரங்களைக் குறிப்பிட்டு பிறப்புச் சான்றிதழ், தேசிய அடையாளஅட்டை, கல்வி / தொழில்வாண்மை தகைமைச் சான்றிதழ்கள், உங்களது அனுபவத்தை நிரூபிக்கும் ஆவணங்கள் ஆகியவற்றின் **போட்டோப் பிரதிகளுடன்** விண்ணப்பங்களை **2016 நவம்பர் 30ல்** அல்லது அதற்கு முன்பு கீழ் குறிப்பிட்ட முகவரிக்கு கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பிவைக்கவும். கடித உறையின் இடது மேற்பக்க மூலையில் **"System Analyst/Programmer-I"** எனக் குறிப்பிடவும்.

**மேற்குறிப்பிட்ட தகைமைகள் இல்லாத அல்லது மாதிரிப்படிவத்துக்கமைய இல்லாத அல்லது விண்ணப்ப முடிவுத் திகதிக்குப் பின்பு கிடைத்த விண்ணப்பங்கள் மேலதிக அறிவித்தலின்றி நிராகரிக்கப்படும்.**

**பிரதான முகாமையாளர்**
**(ஆட்சேர்ப்பும் தொழில் அபிவிருத்தியும்)**
**இலங்கை வங்கி**
**26ஆவது மாடி, தலைமை அலுவலகக் கட்டிடம்**
**“இலங்கை வங்கிச் சதுக்கம்”**
**இல.01, இலங்கை வங்கி மாவத்தை,**
**கொழும்பு 01.**

**எவையேனும் விதத்தில் ஆதரவுகளை நாடுவோர் உடனடியாக தகைமையை இழப்பர்.**

**தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகளை மட்டும் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கும் உரிமை வங்கிக்கு உண்டு.**

BANK OF CEYLON
BOC
ලංකා බැංකුව இலங்கை வங்கி